(ஆ) தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் சில விவர அட்டவணைகளைத் திருத்தும் வகையில் வெளியிடப்படவேண்டிய வரைவு விதி குறித்து.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"தமிழ்நாடு 1931-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) II, III -வது விவர அட்டவணைகளைத் திருத்தும் வகையில், மேற்படி சட்டத்தின் 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் மாநில அரசால் வெளியிடப்படவேண்டிய கீழ்க்காணும் வரைவு விதி, மேற்படி பிரிவின் (3) உட்பிரிவில் வேண்டியுள்ளவாறு ஏற்பளிக்கப்படுவதாக.

வரைவு விதி

தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 17-வது பிரிவு (1) உட்பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக்கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்படி சட்டத்தின் II, III விவர அட்டவணைகளுக்குக் கீழ்க்கண்ட திருத்தங்களைச் செய்கிறார்.

திருத்தங்கள்.

(1) மேற்படி II-வது விவர அட்டவணையில் 1-வது இனத்தைச் சேர்ந்த (a) முதல் (c) வரையுள்ள பகுதிகளிலுள்ள கீழ்க்கண்ட பதிவுகளுக்குப் பதிலாக.

		ரூ.காசு.	ரூ.காசு.
(a)	3½ பரித்திறனுக்குக் குறைந்த திறனுள்ள சைக்கிள்கள், தொடர் வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன் படுத்தாவிட்டால். ..	9·00	12·00
(b)	3½ பரித்திறனுக்குக் குறைந்த திறனுள்ள சைக்கிள்கள், தொடர் வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன் படுத்தினாலும் மேற்படி 3½ பரித்திறனுக்கும் அதிகமான திறனுள்ள சைக்கிள்களைத் தொடர்வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன்படுத்தினாலும், பயன்படுத்தாவிட்டாலும். ..	12·00	15·00
(c)	மூன்று சக்கர சைக்கிள்கள் ..	12·00	15·00

[திரு. ச. இராமசந்திரன்]

கீழ்க் கண்ட பதிவுகளை அமைத்துக்கொள்ள வேண்டும், அவையாவன:—

		ரூ. காசு.	ரூ. காசு.
(a)	3½ பரித்திறனுக்கு குறைந்த திறனுள்ள சைக்கிள்கள், தொடர்வண்டி அல்லது பச்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன் படுத்தாவிடில் ..	9·90	13·20
(b)	3½ பரித்திறனுக்குக் குறைந்த பரித்திற னுள்ள சைக்கிள்கள் தொடர் வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன்படுத்தினாலும், மேற்படி 3½ பரித்திறனுக்கும் அதிகமான திற னுள்ள சைக்கிள்கள், தொடர்வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன்படுத்தினாலும் பயன் படுத்தாவிட்டாலும். ..	13·20	16·50
(c)	மூன்று சக்கர சைக்கிள்கள். ..	13·20	16·50

(2) 7-வது இனத்தில் (a) முதல் (e) வரையிலான பகுதிகளிலுள்ள கீழ்க் கண்ட பதிவுக்குப் பதிலாக

		ரூ.காசு.	ரூ.காசு.
(a)	700 கிலோ கிராம் எடைக்கு மேற்படாத சுமை எற்றப்படாத எடையுள்ளவை ..	30·00	39·00
(b)	700 கி. கிராமுக்கு அதிகமானால் ஆனால் 1500 கி. கிராமுக்கு மேற்படாத [சுமை எற்றப்படாத] எடையுள்ளவை ..	40.00	55·00
(c)	1500 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 2000 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை எற்றப்படாத) எடையுள்ளவை ..	49·00	70·00
(d)	2000 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 3000 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை எற்றப்படாத) எடையுள்ளவை ..	58·00	82·00
(e)	3000 கி. கிராமுக்கு அதிகமான (சுமை எற்றப்படாத) எடையுள்ளவை ..	70·00	100·00

கீழ்க் கண்ட பதிவுகளை அமைத்துக்கொள்ளவேண்டும், அவையாவன:—

(a)	700 கி. கிராம் எடைக்கு மேற்படாத (சுமை எற்றப்படாத) எடையுள்ளவை ..	33·00	42·00
(b)	700 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 1500 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை எற்றப்படாத) எடையுள்ளவை ..	44·00	60·50
(c)	1500 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 2000 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை எற்றப்படாத) எடையுள்ளவை ..	53·90	77·00
(d)	2000 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 3000 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை எற்றப்படாத) எடையுள்ளவை ..	63·80	90·20
(e)	3000 கி. கிராமுக்கு அதிகமான (சுமை எற்றப்படாத) எடையுள்ளவை ..	77·00	110·00

[திரு. ச. இராமசந்திரன்]

(3) மேற்படி III-வது விவர அட்டவணையில் 1-வது இனத்திலுள்ள கீழ்க் கண்ட பதவிற்குப் பதிலாக;

	ரூ.காசு.	ரூ.காசு.	ரூ.காசு.	ரூ.காசு.
(a) இயந்திர விசையைக் கொண்டு இழுத்துச் செல்வதற்கான இணைப்புக் கொண்ட மோட்டார் ஸ்கூட்டர்கள் அல்லது சைக்கிள்கள் உட்பட, தொடர் வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படாத மோட்டார் சைக்கிள்கள்.	2·00	6·00	3·00	8·00

கீழ்க்கண்ட பதிவை அமைத்துக்கொள்ள வேண்டும், அதாவது,—

இயந்திர விசையைக் கொண்டு இழுத்துச் செல்வதற்கான இணைப்புக் கொண்ட மோட்டார் ஸ்கூட்டர்கள் அல்லது சைக்கிள்கள் உட்பட, தொடர் வண்டி அல்லது பக்க இணைப்பு வண்டியை இழுக்கப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படாத மோட்டார் சைக்கிள்கள். ..	2·20	6·60	3·30	8·80

(4) மேற்படி III-வது விவர அட்டவணையில் 5-வது இனம் (a), (b), (c) பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ள பதிவுகளுக்குப் பதிலாக,—

(a) 700 கி. கிராம் எடைக்கு மேற்படாத (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை. ..	4·50	14·00	7·50	19·00
(b) 700 கி. கிராம் எடைக்கு அதிகமான ஆனால் 2,200 கி. கிராம் எடைக்கு மேற்படாத (சுமை எற்றப்படாத) எடையுள்ளவை.	6·50	19·00	7·50	22·00
(c) 2,200 கி. கிராமுக்கு அதிகமான (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை.	8·50	25·00	11·50	34·00

கீழ்க்கண்ட பதிவுகளை அமைத்துக்கொள்ளவேண்டும், அவையாவன :—

(a) 700 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை எற்றப்படாத) எடையுள்ளவை.	4·95	15·40	8·25	20·90
(b) 700 கி. கிராமுக்கு அதிகமான ஆனால் 2200 கி. கிராமுக்கு மேற்படாத (சுமை எற்றப்படாத) எடையுள்ளவை. ..	7·15	20·90	8·25	24·20
(c) 2,200 கி. கிராமுக்கு அதிகமான (சுமை ஏற்றப்படாத) எடையுள்ளவை.	9·35	27·50	12·65	37·40

விளக்கக் குறிப்பு

இந்திய அரசு மேற்கொண்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு உதவும் வகையில் கூடுதல் நிதிவாயில்களைத் திரட்டும் நோக்கத்துடனும், இம் மாநிலத்தில் வளர்ச்சிப் பணிகளில் வேகம் தனியாமல் பார்த்துக் கொள்ளவும். கார்கள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் ஆகியவைகளுக்குத் தற்போதுள்ள வரிவீதத்தில் மேலும் 10 சதவீதம் கூட்டுவதன்மூலம் சிற்சில சரிக்கட்டல்களை அரசு செய்ய இத் தீர்மானம் வழிவகை செய்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(5) அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(ஆ) சென்னை மாநகராட்சி நிலைக்குழு உறுப்பினர்கள் தேர்தல் தொடர்பான விதிகள் குறித்து.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 6—12—1971-ம் நாளன்று பேரவையின் முன் வைக்கப்பட்ட சென்னை மாநகராட்சி நிலைக்குழு உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பான விதிகள் * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இந்தத் தீர்மானத்திலே . . .

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member first move his amendment.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :—

"In Rule 10, for the sentence, 'The candidate who obtains the largest number of votes, or, if there is more than one vacancy, as many of the candidates at the top of the poll as there are vacancies to be filled, shall be declared to have been duly elected' substitute the sentence, 'The declaration will be on the basis of proportional representation with single transferable vote'."

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I second the amendment

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

"In rule 5, insert the following as sub-rule (4); '(4) The election shall be based on the system of proportional representation by means of single transferable votes'."

THIRU J. JAMES : Sir, I second the amendment.

---

* 122-125-ம் பக்கங்களில் நான்காம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.